கிறிஸ்துவுக்குள் எனக்குப் பிரியமானவர்களே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் வாழ்த்துக்கள்.

1. **இயேசுவே வருகும்** அக்டோபர், 2003 செய்தித் தொகுப்பில் நவம்பர் மாதம் 16ம் தேதி மாலை 4 மணியளவில் எனது இல்லத்தில் **அன்பின் விருந்து** நடைபெறும் எனவும், அது முதற்கொண்டு பிரதிமாதம் 3வது ஞாயிறு மாலை 4 மணிக்கு நடைபெறும் எனவும் எழுதியிருந்தேன். நமது மக்களில் அநேகர் நாங்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவங்களாயிருக்கிறோம் என்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்கள் ஸ்தானத்தை அறிந்து, அதை சரீரத்தில் பொறுத்த முடியவில்லை. ஏனென்றால் பெரும்பாலும் இவர்கள் சுபாவ அன்பில்லாதவர்களும், நல்லோரை பகைக்கிறவர்களாயும், சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதன் பலனை மறுதலிக்கிறவர்களாயுமே இருக்கிறார்கள். ஆதலால் இந்த விருந்துக்காக, இவர்கள் ஆவிக்குரியவர்கள், இக்காலத்துக்குரிய செய்தியின் மேல் வாஞ்சையுள்ளவர்கள் என்று நினைத்து, நான் அறிந்த சுமார் 50 பேருக்கு மட்டும் அழைப்பு அனுப்பியிருந்தேன். மேலும் முதல் விருந்திற்கு வருகிறவர்களிடம் கேட்டு அறிந்து நான் அறியாதவர்கள் இருப்பார்களாகில் அவர்களுக்கும் அழைப்பு கொடுக்கலாம் என நினைத்திருந்தேன்.

2. இக்காலத்திற்கு செய்தியை உபதேசிக்கிறோம், அதன்படி நடந்து வருகிறோம் என்று கூறும் சபைகளுக்கு ஆவிக்குரிய உணவு கிடைக்காமல், அது பட்டினி கிடந்து மரித்துக் கொண்டிருக்கிறது. போதகர்கள் தங்கள் சுயகருத்துக்களையும், கோட்பாடுகளையும், உபதேசங்களையும் ஆடுகளுக்கு ஆகாரமாகக் கொடுத்து அவைகளை சாகடித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் இப்படிப்பட்ட ஒரு விருந்து விசுவாசிகள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த தேவை என்று ஆவியினால் உணர்த்தப்பட்டேன்.

3. என்னால் அழைக்கப்பட்டவர்களில் சிலர் சபைகூடும் நாள் கூட வியாபாரம் செய்கிறேன் ஆதலால் நான் என் வியாபாரத்தைக் கவனிக்க வேண்டும், சமயம் கிடைத்தால் மட்டுமே வரமுடியும் என்று கூறினர். சிலர் நாங்கள் எங்களுக்கு அறிமுகமான பாஸ்டர் மகன் கலியாணத்தின் நிமித்தமாக வெளியூர் செல்லவேண்டியவர்களாயிருக்கிறோம், ஆதலால் நாங்கள் வருவது நிச்சயமாகக் கூறமுடியாது என்றனர். சிலர் எங்கள் சபையில் ஒரு வரவேற்பு இருப்பதாகத் தெரிகிறது, எங்களுக்கு எங்கள் சபைக் காரியம் தான் முக்கியத்துவம், ஆதலால் வருவது கொஞ்சம் கஷ்டம் தான் என்று கூறினார்கள். சிலர் எங்கள் சபையில் தடை உத்தரவு போடப்பட்டிருக்கிறது என வெளிப்படையாகக் கூறினார்கள். சிலர் ஐயோ, நான் மறந்தே போய்விட்டேனே எனவும், சிலர் பூவிருந்தவல்லி நகரத்திலிருந்து மிக தூரமாகயிருக்கிறது எனவும் அங்கலாய்த்துக் கொண்டார்கள். பொதுவாக நாம் நமது உறவினர்களின் திருமண அழைப்பு ஒரு மாதத்திற்கு முன்பே கிடைத்தாலும், அதை மனதில் வைத்திருந்து ஏற்ற வேளையில் 400/500 மைல்கள் பிரயாணப்பட்டுச் சென்று திருமண காரியத்தில் பங்குகொண்டு வருகிறோம். ஆனால் ஆவிக்குரிய காரியத்தில் அக்கறை செலுத்த தவறிவிடுகிறோம். அதை அசட்டை பண்ணுகிறோம். இவ்வாறாக மத்.22 அதிகாரத்தின்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு சாக்குபோக்குக் கூறி வர மனதில்லாதிருந்தார்கள். அழைப்பை அசட்டை பண்ணினார்கள். கர்த்தரை அசட்டை பண்ணினார்கள்.

4. அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்ற வேத வாக்கியத்தின்படி அந்த நாளுக்கென்று தேவனால் முன்குறிக்கப்பட்டு, அழைக்கப்பட்டவர்கள் நானும் என் குடும்பத்தினருமாகயிருந்தபடியால் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். நாங்கள் மாலை 5 மணியளவில் கூடி, ஜெபித்து, கர்த்தருடைய இராப்போஜன பந்தி மற்றும் கால்களைக் கழுவுதல் சடங்குகளை ஆசரித்தோம். இரவு 7 மணிக்கு விருந்து முடிவு பெற்றது.

5. பிரியமானவர்களே, சோற்றை போட்டு ஒரு கூட்டத்தை எனக்கு பின் தக்க வைக்க வேண்டும் என்ற நோக்கம் என்னிடமில்லை, அதற்கு தேவையான பண வசதியும் என்னிடமில்லை. இது முற்றிலுமாக ஒரு ஆவிக்குரிய ஐக்கியம். இங்கு அவிசுவாசிகளுக்கும், பாவணைவிசுவாசிகளுக்கும் நிச்சயமாக இடமேயில்லை. ஆதலால் தான் அநேகர் அழைக்கப்படவில்லை. மேலும் சிலர் அறிமுகத்தினால் அழைக்கப்பட்டாலும் அவர்கள் காரியம் சரியாயில்லை என நான் அறியவந்ததால் அவர்கள் கூட்டத்திற்கு வரவேண்டாம் என கூறி விட்டேன். இதனால் சிலருக்கு என் மீது வருத்தம் இருந்திருக்கும். அதற்காக நான் ஒன்றும் செய்ய முடியாது.

6. எனக்கு மிக்க நெருக்கமாகயிருந்த சிலர் கூட இந்த விருந்தை உதாசீனப்படுத்தினர். நான் அவர்களை நிர்பந்தப்படுத்தியோ, வருந்தியோ, கட்டாயப்படுத்தியோ அழைக்கவில்லை. அவரவர்கள் சுயாதீன முடிவுக்கே விட்டுவிட்டேன். ஏனென்றால் இது ஒரு ஆவிக்குரிய காரியம்.

7. கடந்த 25 ஆண்டுகளாக நான் இக்காலத்திற்குரிய செய்தியில் இருக்கிறோம். இதோ இப்பொழுதே பறந்துவிட ஆயத்தமாயிருக்கிறோம், இப்பொழுது ஆயிரம் வருட அரசாட்சியில் இருந்து கொண்டிருக்கிறோம் என்றெல்லாம் தம்பட்டமடிக்கும் அநேக மக்களை சந்தித்திருக்கிறேன். இவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை நன்கு அறிவேன். ஆதலால் அழைக்கப்பட்டவர்களுடைய அசட்டைதனம் எனக்கு ஒரு அதிர்ச்சியையோ, ஏமாற்றத்தையோ, வருத்தத்தையோ உண்டாக்கவில்லை. மாறாக தேவனுடைய வார்த்தை நிறைவேறியது அறிந்து மகிழ்ச்சியே அடைந்தேன்.

8. கர்த்தருக்குச் சித்தமானால் டிசம்பர் 2003 **அன்பின் விருந்து,** 21ம் தேதி வாரத்தின் முதல் நாள் மாலை 4 மணியளவில் நடைபெறவிருக்கிறது என்பதை இத்துடன் முன்னறிவிப்பாகத் தெரிவித்து, அழைக்கப் பட்டவர்களை மீண்டும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் அழைக்கிறேன்.

**கிறிஸ்துவின் அன்பில்**
**சகோ.காலேப் யோசுவா.**